தனி இதழ் 1 அணா ✱ இலங்கையில் 10 சதம் ★ PHONE: [illegible]

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: மாசி 9உ செவ்வாய் (21—2—56) ★ ★ வெளியூர்: மாசி 10உ புதன் (22—2—56) [இதழ் 218

24-ந் தேதி பொது வேலைநிறுத்தம்

கல்கத்தா, பிப். 19—

வங்காள—பீகார் இணைப்பை எதிர்த்து 24-ந் தேதி பொது வேலைநிறுத்தத்தை மேற்கொள்ளும்படி இடதுசாரி கட்சிகள் கோரியுள்ளன.

மேற்கு வங்க மொழிவழி மாகாண சீரமைப்புக் குழு, தொழிற் சங்கங்கள், இடதுசாரி கட்சிகள் ஆகியவைகள் கூட்டாகச் சேர்ந்துள்ளன.

பொது வேலைநிறுத்தக் கோரிக்கையை, இன்று மாலை நடைபெற்ற கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது.

தமிழகம் தலைநிமிர்ந்து நிற்கிறது

தலைநகர் செயலற்றுக் கிடந்த காட்சி

அரசியல் வரலாறு காணாத பரிபூரண ஹர்த்தால்

'தமிழகம் தலைநிமிர்ந்து நிற்கிறது' என்ற செய்தியைத் திக்கெட்டும் பறைசாற்றியிருக்கிறது--சர்வ கட்சிக் கூட்டணியினர் ஏற்பாடு செய்து வெற்றிபெற்றுள்ள பிப்ரவரி 20--பொது வேலைநிறுத்தம்.

பிப்ரவரி 20—தமிழக வரலாற்றில் சுவையும் பயனுமிக்கதோர் கட்டத்தை எதிர்காலச் சந்ததியினர் காணுவதற்கு வாய்ப்பாகச் சிறப்புடன் சிருஷ்டித்திருக்கிறது!

'எங்கள் எண்ணங்கள் சட்டங்களாக அமுலாகும்; ஆசைகள் திட்டங்களாக நிறைவேறும்; பேச்சுக்கள் வேதங்களாக உலா வரும்; உபதேசங்கள் மந்திரங்களாக ஜெபிக்கப்படும்; தீர்ப்பு வழங்குவோம்—அது, அநீதி என்று எங்களுக்குத் தோன்றினாலும் மாற்றிக் கொள்ளமாட்டோம்; எங்களிடம் சிக்கியுள்ள அதிகாரத்திற்குட்பட்ட ஆற்றல் முழுவதையும் ஒன்று திரட்டி அந்த அநீதியை அமுல் செய்தே தீருவோம்' என்ற டில்லி மமதையாளர்தம் ஆணவத்தை இடிப்பொடித்திருக்கிறது, பிப். 20—பொது வேலைநிறுத்தம்.

'அவரே சொல்லிவிட்டார்; ஆகவே, எதிர்க்கக்கூடாது—ஏற்றுக்கொள்ளவேண்டும்,' என்று இச்சகம் பேசித் திரியும் 'கனம்'கள், 'தட்சிணப் பிரதேசம் இப்போது இல்லை' என்று நயவஞ்சகம் புரியும் 'இரண்டுங்கெட்டான்'கள் இவர்களின் முகத்தில் அறைந்து, 'நீங்கள் அல்ல தமிழகம்—தமிழகம் இதோ,' என்று எடுத்துக்காட்டியிருக்கிறது பிப்ரவரி 20—பொதுவேலை நிறுத்தம்.

'ஹர்த்தால் வேண்டாம்; இது காமராசரைக் கவிழ்க்கும் சூழ்ச்சி; தமிழக மக்களே! செவி சாய்க்காதீர்! ஹர்த்தாலில் ஈடுபடாதீர்!'—என்று ஓலமிட்டோரின் முகங்களில் கரி அப்பியிருக்கிறது பிப்ரவரி 20—பொதுவேலை நிறுத்தம்.

'மொழிவழியாக தமிழ் மாநிலம் அமையவேண்டும்'

'தமிழக எல்லைகள், மொழி வழியாக ஜனநாயக அடிப்படையில் நிர்ணயிக்கப்படவேண்டும்.'

'சென்னை ராஜ்யம்'—என்ற பெயர், 'தமிழ் நாடு' என்ற இயற்பெயரால் அழைக்கப்படவேண்டும்.'

'தட்சிணப் பிரதேசம் என்ற சூதான திட்டம் உடனடியாகக் கைவிடப்படவேண்டும்'

என்ற தமிழ் மக்களின் தீர்க்கமான எண்ணம் பிப்ரவரி 20-ந் தேதி பொதுவேலை நிறுத்தம் நாடெங்கும் அமைதியாக—சிறப்பாக சர்வ கட்சிக் கூட்டணியின் வேண்டுகோளுக்கு ஒப்ப நடைபெற்று முழு வெற்றியடைந்திருப்பதின் மூலம் மிகத் தெளிவாக—மகோன்னதமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

தாயகத்தின் தலைநகரம் சென்னையிலும், மற்றும் மதுரை, கோவை, திருச்சி, சேலம், வேலூர், குடந்தை, கடலூர் முதலிய பெருநகரங்களிலும், ஏனைய நகரங்களிலும், பேரூர்கள் — சிற்றூர்கள் — கிராமங்களில் எல்லாம் பிப்ரவரி 20-ந் தேதி—பொது வேலைநிறுத்தம் சிறப்பாக, அமைதியாக, இது வரை எப்போதும் நடந்திரா வண்ணம் நடைபெற்றிருக்கிறது.

தமிழக சர்வகட்சிக் கூட்டணியின் மகத்தான சாதனை—தமிழ் மக்கள் ஒன்றுபட்டுத் தேடிப் பெற்றுள்ள இந்த வெற்றி!

தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி கண்டு சகல கட்சியினரிடையேயும் வீறிட்டெழுந்த பொது உணர்ச்சி, மகிழ்ச்சி தரும் தோழமை உணர்ச்சி, முதல் வெற்றியைப் பெற்றுவிட்டது.

பிப்ரவரி 20-ல் தமிழகமெங்கணும் கடைகள் அடைத்துக் கிடந்தன; உணவு விடுதிகள், சிற்றுண்டிச்சாலைகள், தேநீர் நிலையங்கள் எல்லாம் மூடிக்கிடந்தன.

'அரையணா கொடுத்தால்தான் பள்ளிக்குப் போவேன்' என்று அடம் பிடித்து அழுது, காசைப் பெற்றுக் கொண்டு, தலை வாரிப் பூச்சூடி, பள்ளி நோக்கிக் குறுநகையுடன் குறும்பு நடை போடும் மழலைகளை—குழந்தைகளை வீதிகளிலே காண முடியவில்லை; பள்ளிகள் அடைத்துக் கிடந்தன; காளைகள்—இளம் பருவத் துடிப்பும், எண்ணமிடும் ஆற்றலும் கொண்ட கல்லூரிக் காளையர் வகுப்புக்களுக்குச் செல்லவில்லை.

அன்று சினிமா, நாடகம் போன்ற கேளிக்கை அரங்கங்கள் தூங்கிவழிந்தன; போவார் இல்லை—போலீசார் பாதுகாப்புத் தருவதாக வருந்தி அழைத்தும்!

சில ஆலைகள் திறந்திருந்தன—ஆட்சியாளருக்கு சாமரம் வீசும் முதலாளிமார்களும் அவர்தம் எடுபிடிகளும் மட்டுமே வந்தனர்! ஆலைகளை இயக்கும் ஆற்றலும், தாயகத்திற்கு முதல் இடம் தரும் இதயமும் கொண்ட தொழிலாளர்கள் அங்கே செல்லவில்லை.

பஸ் வண்டிகள் ஆங்காங்கே ஓடின—சர்வகட்சிக் கூட்டணியினர், 'எவரும் அவை ஓடுவதைத் தடுக்கக் கூடாது; அவை தாமாகவே நிலைநிற்க வேண்டுமே தவிர கட்டாயப்படுத்தக் கூடாது' என்று தீர்மானித்திருந்ததினால்! பஸ்கள் காலியாக ஓடினவே தவிர பிரயாணிகளை ஏற்றிக் கொண்டு அல்ல.

சர்க்கார் அலுவலகங்கள் வேலை செய்தன—வழக்கமான உற்சாகத்துடன், உயிரோட்டத்துடன் அல்ல—'வேலை செய்கிறோம்' என்ற வெட்கம் தரும் வேதனைக்கும், 'என்ன நேருமோ?' என்ற வீண் அச்சத்திற்கும் ஆட்பட்டுத்தான்!

பொதுவில் பிப்ரவரி 20—பொது வேலைநிறுத்தம் தமிழக எழுச்சியை எடுத்துக் காட்டியிருக்கிறது!

எழுந்து நிற்கும் தமிழகம், தன் எதிர்கால வாழ்வுசிறக்க விரைவிலேயே பொதுவழி தேடுவது நிச்சயம் என்ற நம்பிக்கையைத் தந்திருக்கிறது.

ஒத்துழைப்பு கோரப்படுமாம்!

புதுடில்லி, பிப். 21—

"வாக்காளராகத் தகுதியுள்ள எல்லா மக்களையும் வாக்காளர் பட்டியலில் பதிவு செய்ய முடியுமான எல்லா நடவடிக்கைகளையும் தேர்தல் குழு எடுத்துக் கொள்ளும்,"

என்று, சட்ட அமைச்சர் படாஸ்கர் மக்கள் சபையில் உறுதியளித்தார்.

'இந்த விஷயத்தில் அரசியல் கட்சிகள், மற்றைய நிறுவனங்களின் ஒத்துழைப்பை கோரப்படும்,"

என்று, அவர் குறிப்பிட்டுச் சொன்னார்.

மரண தண்டனையே இனி கிடையாதாம்!

பிரிட்டிஷ் காமன்ஸ் சபை, பிரிட்டனில் மரண தண்டனையை ஒழித்துத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. கொலைக் குற்றத்துக்கு மரண தண்டனை விதிக்கக் கூடாதென்ற தீர்மானத்திற்கு 'ஓட்' அளிப்பதில் கட்சிக் கட்டுப்பாடு கையாளப்படவில்லை.

திருச்சியில் பூரண ஹர்த்தால்

(டிரங் போன் மூலம்)

திருச்சி, பிப். 20—

திருச்சி மாவட்டத்தில் கூட்டணியில் அங்கம் வகிக்கும் தி. மு. கழகம், கம்யூனிஸ்டுக் கட்சி, தமிழரசுக் கழகம் முதலிய கட்சிகளைச் சேர்ந்த சுமார் 100 பேர்களைப் போலீசார் கைது செய்த நடவடிக்கையுடன் மாவட்டம் முழுவதிலும் உள்ள நகரங்கள் பேரூர்கள், சிற்றூர்களில் எல்லாம் கடையடைப்பும், பொது வேலை நிறுத்தமும் அமைதியாக நடைபெற்றுள்ளன.

திருச்சி நகரில் முக்கியமான தெருக்களில் கடைகள் மூடப்பட்டு அமைதியில் ஆழ்ந்திருந்தன.

சினிமாக் கொட்டகைகளும், பெரும் வணிக நிலையங்களும், உணவு விடுதிகளும், கல்வி நிலையங்களும் பெரும்பாலானவையும் திறக்கப்படவில்லை அல்லது திறந்திருந்தும் வேலை செய்யவில்லை.

பொது வேலை நிறுத்தம் நகரில் மாபெரும் வெற்றியைத் தேடித்

(8-ம் பக்கம் பார்க்க)

இலட்சம் மக்கள் கொண்ட மாபெரும் ஊர்வலம்

தலைவர்கள் ஆணைக்குத் தமிழர் கட்டுண்டனர்

தமிழர் தலைவரின் இதய கீதம்

உறுதிமொழி எடுத்த உணர்ச்சிமிக்க காட்சி!

பொதுவேலைநிறுத்தம் அமைதியாக நடைபெற்ற மாட்சி

சென்னையின் புகழ்க்கொடி சிறப்புற உயர்ந்தது

சென்னை, பிப். 20—

தாயகத்தின் தலைநகரம் சென்னை மாநகர், இன்று, தமிழகத்தின் எழுச்சிக்கு நிலைக்களனாய்க் காட்சி தந்தது.

கூட்டணியினர் வேண்டுகோளுக்கிணங்க, பிப். 20-ந் தேதியன்று வெகு அமைதியாகப் பொது வேலைநிறுத்தம் செய்து, பெரும் நற்பெயரையும், பெருமையையும் சென்னை சம்பாதித்துக் கொண்டது.

நகரத்தைப் பல கூறுகளாகப் பிளந்து நிற்கும் குறுகல் நெடுகலான சிறிய-பெரிய வீதிகள் பலவும் இன்று மாலை வரை வெறிச்சோடிப்போய்க் கிடந்தன. தினமும் காலை மலர்ந்ததும் கூடவே மலரும் சந்தடியும், பரபரப்பும் இன்று அரும்பவே இல்லை; அமைதிதான் குடிகொண்டிருந்தது.

சென்னையின் பல்வேறு பகுதிகளிலும் பரவிக் கிடக்கும் தொழிலகங்கள், ஆலைகள், கடைகண்ணிகள், உணவு விடுதிகள், சினிமா—நாடக அரங்கங்கள், பள்ளிகள், கல்லூரிகள் எல்லாம் மூடிக்கிடந்தன. சர்க்காரின் நிர்வாகத்திலிருக்கும் போக்குவரத்து சாதனங்கள் மட்டும்—பஸ், மின்சார இரயில் ஆகியவை மட்டும் நகரின் அமைதியைக் குலைக்க முயற்சித்துக்கொண்டிருந்தன. சில பஸ்களில் போலீசார் மட்டுமே பிரயாணம் செய்தனர்; சிலவற்றில் ஆளும் வர்க்கத்தினருக்கு ஆதரவு தேடும் சில காங்கிரஸ்காரர்கள் மட்டுமே ஏறிச் சென்றனர்.

பல பஸ்கள் காலியாகவே ஓட்டிச் செல்லப்பட்டன; நெரிசல் இல்லை; இடம் கிடைக்காது வெட்டவெளியில் நின்று வெயிலில் காய்ந்து அவதிப்படும் 'கியூ' வரிசைகள் இருக்கவில்லை.

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 21—2—'56 செவ்வாய்

மனங்கனிந்த நன்றி!

மொழிவழி மாநிலக் கோரிக்கைக்கு, தங்கள் கருத்தை ஒருமுகமாக அளித்துவிட்டனர், தமிழ்ப் பெருங்குடி மக்கள்.

'தேவிகுளம் — பீர்மேடு போன்ற வளப்பமுள்ள தமிழ் மக்கள் வாழும் பகுதிகளைக் கேரளத்துடன் இணைத்துவிட்டது அக்கிரமம்' என்பதைத் திட்டவட்டமாகக் காட்டிவிட்டனர், மூவேந்தர் வழிவந்தத் தமிழர்கள்.

தாங்கள் விரும்பாத 'தட்சிணப் பிரதேச' கோட்பாட்டை தங்கள்மீது வலுவில் திணிக்கும் முயற்சிக்கு, தங்கள் சீரிய கருத்தைத் தெளிவாகத் தெரிவித்துவிட்டனர் செந்தமிழ் நாட்டவர்.

'தமிழர்களே வாழும் நிலப் பரப்பிற்குச் 'சென்னை' என்ற பெயரை மாற்றி 'தமிழ் நாடு' எனப் பெயரிட வேண்டும்' என்ற தங்கள் உள்ளக்கிடக்கையை உறுதியுடன் உணர்த்திவிட்டனர், நம் தமிழர்.

'ஆசிய ஜோதியாம் நேரு அளித்திட்ட அநீதியை, நாங்கள் ஒருநாளும் ஏற்கோம்; உயிருள்ள வரையில் எதிர்ப்போம்; இன்னுயிர் வேண்டினும் அதற்காக ஈவோம்' என்று சூளுரைத்துக் கொண்டனர், மறக்குடி தமிழ் மக்கள்.

சர்வ கட்சி கூட்டணி இட்ட கட்டளைக்கிணங்க பொது வேலைநிறுத்தத்தை நூற்றுக்கு நூறு பங்கு வெற்றி பெற செயலாற்றிக் காட்டி விட்டனர், செந்தமிழ் மக்கள்.

பெரும் கனம் நேரு பெருமான் பெருமூச்செறிய—கனம் காமராசர் கண்பிசைய—சுற்றியுள்ள அமைச்சர் அம்மாஞ்சிகள் வெட்கித் தலைகுனிய—பொது வேலைநிறுத்தம் வெற்றிக் கொடி நாட்டிவிட்டது. தமிழ்நாட்டு வரலாற்றில் சிறப்பானதோர் இடத்தைப் பெற்றுவிட்டது.

தொழிலாளர் — காங்கிரஸ் பிடியில் உள்ள சிலர் நீங்கலாக—பல்லாயிரவர் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

வியாபாரத் துறையில் ஈடுபாடு உடைய சிறிய-பெரிய வியாபாரிகள் அனைவரும் வேலைநிறுத்தத்தில் இரண்டறக் கலந்துவிட்டனர்.

மாணவமணிகள் பலரும் பாராட்டத்தகு வகையில் தங்கள் கடமையைச் செய்திருக்கின்றனர். பல ஊர்களிலும், கூட்டணியின் வேண்டுகோளுக்கு இணங்க வகுப்புகளுக்குச் செல்லாது அமைதியாக வேலைநிறுத்தம் செய்திருக்கின்றனர்.

உழவர் — உழத்தியருங்கூட வேலைநிறுத்தத்தில் கலந்துகொண்டு, தமிழர்களின் ஒற்றுமைப் பண்பையும், நெஞ்சுரத்தையும், செயல்திறத்தையும் நிலைநாட்டியுள்ளனர்.

தமிழர்களான பஸ் முதலாளிகள்—டி. வி. எஸ். முதலாளிகள் போன்று ஒருவர் இருவர் நீங்கலாக—மற்றவர் அனைவரும் பஸ்களை, தங்குமிடங்களிலேயே தேங்கிக் கிடக்கச் செய்துவிட்டனர்.

நடிகர்கள் நடிக்கவில்லை; சினிமா கலைஞர்கள் தொழில் புரியவில்லை; சினிமா காட்சிக் கூடங்கள் செயல்படவில்லை.

'வீணர் விளையாட்டு,' 'பதவி வெறியர்களின் வலை வீச்சு' என்று வேலை நிறுத்தத்தை, காங்கிரஸ் தலைவர்கள் எனப்படுவோர் நாத்தழும்பேற நவின்றபோதிலும், காந்திய வழியை இன்றும் மறக்காதிருக்கின்ற காங்கிரஸ் கட்சியினர், பொது வேலை நிறுத்தத்தில் ஆர்வத்துடன் பங்குகொண்டு, வெற்றி பெற முழுமனதுடன் ஊக்கியும் உள்ளனர். தம் செயற்கரும் செயலால், தமிழர் மானத்தைக் காத்துள்ளனர்.

சென்னை முதல் குமரி முனை வரை, தமிழக மக்கள் வாழும் ஒவ்வொரு நகரும், பேரூரும், சிற்றூரும், பட்டிதொட்டியும், பிப்ரவரி இருபதாம் நாளில் சலனமற்றுக் கிடந்தன; பூட்டிய கடைகள் திறக்கப்படவில்லை; தொழில் நிலையங்கள் மூடியே கிடந்தன; போக்குவரத்துகள் இடம் பெயரவில்லை.

வெற்றி! வெற்றி! மகத்தான வெற்றி!

வீரத்திற்குத் தமிழ் மரபு கொண்டுள்ள பொருளின் தன்மையையும் தரத்தையும், பிப்ரவரி இருபதில் டெல்லி—ஏன்—அவனி முழுதும் அறிந்துகொண்டே விட்டது.

'சென்னை, பம்பாய் ஆகாது' என்ற பேருண்மையை தமிழ் மக்கள் இருபதாம் நாள் தெளிவுபடுத்திவிட்டனர்.

ஆத்திரம் மூட்டப்பட்டாலும் அமைதி குலையாது, தாக்கப்பட்டாலும் தாங்கிக்கொண்டு நெஞ்சுறுதி தளராது, ஏற்றுக்கொண்ட கடமையைச் செவ்வனே செய்து முடிக்கும் ஆற்றல் தமிழரின் பரம்பரைச் சொத்து—பிறவிப் பண்பு என்பதை உலகோர் அறிய தமிழ்க் குலம் பிப்ரவரி இருபதில் நடந்து காட்டி இருக்கிறது. பொது வேலை நிறுத்தம் வெற்றிக்கொடி நாட்டி இருக்கிறது.

பூரிப்பான செய்தி! தமிழர்—அவர்கள் எங்கிருந்தாலும்—தரை நோக்காது தலை நிமிர்ந்து நோக்கும் நற்செய்தி.

தமிழர் தந்த தீர்ப்புக் கண்டு தரணியாளும் தருக்கர்கள் கண் விழிக்க வேண்டும்—கனம் காமராசர் கருத்து பெறவேண்டும்!

நாட்டு மக்கள் எதை விரும்புகிறார்கள்—எவர் அணியில் திரண்டு இருக்கிறார்கள் என்ற உண்மை, இருபதாம் நாள் ஐயத்திற்கு இடமின்றி அறிவிக்கப்பட்டாய்விட்டது.

இவ்வுயர்ந்த உண்மையை ஆளவந்தார்களுக்கும் அவனியுள்ளோர்களுக்கும் அறிவிக்க, பொதுவேலை நிறுத்தத்தில்பங்கு கொண்டு, நூற்றுக்கு நூறு வெற்றி பெறச் செய்த எம் தமிழ் பெருங்குடி மக்கள் அனைவருக்கும் நமது மனங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

வாழ்க தமிழ் மக்கள்! வெல்க அவர் கோரிக்கைகள்!

அதிகார வெறியின் இரத்த தாகம்

கள்ளக்குறிச்சி காணிக்கை தருகிறது

துப்பாக்கிப் பிரயோக தர்பார்

மூவருக்குப் பலத்த குண்டடி

சென்னை, பிப். 20—

அதிகார வெறியின் இரத்த தாகத்திற்குக் கள்ளக்குறிச்சி காணிக்கை தந்திருக்கிறது.

நகரெங்கும் கடையடைப்பும், பொதுவேலை நிறுத்தமும் அமைதியாக—வெற்றிகரமாக நடைபெற்றிருக்கிறது. இந்த நிலையில், திறந்து வைத்திருந்த கடை ஒன்றை மூடுமாறு தோழர் ஒருவர் தனியாகச் சென்று கேட்டபோது, அவரைப் போலீசார் கைது செய்தனராம்.

அதைத் தொடர்ந்து ஏராளமான மக்கள் கூடி அநியாயமாக கைது செய்யப்பட்ட தோழரை விடுதலை செய்யக்கோரியதற்காக, அவர்கள் மீது போலீசார் துப்பாக்கிப் பிரயோக தர்பார் நடத்தியிருக்கின்றனர்.

இந்தக் கொடிய செயலின் விளைவாக மூவருக்குப் பலத்த குண்டடி ஏற்பட்டது என்றும், ஒருவர் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் தெரியவருகிறது.

ஆத்தூர் வட்டத்தில் துப்பாக்கி பிரயோகம்

நால்வருக்குப் படுகாயம்

(டிரங்போன்)

ஆத்தூர், பிப். 21—

ஆத்தூர் வட்டத்தில் நேற்று போலீசார் 4 இடங்களில் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்; நான்கு பேர் படுகாயமுற்றனர்; ஒருவர் நிலை கவலைக்கிடம்; காயம் பட்டோரில் மூவர் தி. மு. கழகத் தோழர்கள்; ஒருவர் எக்கட்சியையும் சேராதவர்.

20 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

கோவை காட்டிய எழுச்சி

(டிரங் போன் மூலம்)

கோவை, பிப். 20—

நேற்று இரவே, கூட்டணியில் இடம் பெற்றிருக்கும் தி. மு. கழகம், கம்யூனிஸ்டு கட்சி ஆகியவற்றின் உள்ளூர் தோழர்கள் பதினைந்து பேர்களைப் போலீசார் கைது செய்துவிட்டபோதிலும், இன்று பொதுவேலை நிறுத்தம் வெகு அமைதியாக நடைபெற்றிருக்கிறது.

உணவு விடுதிகள், நகை துணிக் கடைகள் இதர வர்த்தக நிலயங்கள் எல்லாம் திறக்கப்படவில்லை.

சர்க்கார் கலைக் கல்லூரி, இதர கல்லூரிகள், உயர்நிலைப் பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்கள் பள்ளிகளுக்குச் செல்லவில்லை.

தொழில் நகரமான கோவையின் தொழிற்சாலைகள் திறந்திருந்தும், தொழிலாளர்கள் வேலைக்குச் செல்லாமையினால் அவை எழுப்பும் பேரிரைச்சல், உண்டாக்கும் புகைமண்டலம் எவையும் எழும்பவில்லை.

சுமார் 35,000 தொழிலாளர்கள் கோவையில் பொது வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்டனர்.

கோவை பிப்ரவரி 20—பொது வேலை நிறுத்தத்தைத் தனிச் சிறப்போடு—அமைதிக்கு சிறிதும் குந்தகம் இன்றி நடத்திக் காட்டியிருக்கிறது.

போலீசார் தங்களது வழக்கமான 'ஜபர்தஸ்து'களுடன் ஆடம்பரமாக வண்டிகளில் ஏறிக்கொண்டு வீதிகளை வலம் வந்தனர்.

இன்று, நகர் முழுவதிலும் பல பாகங்களிலுமாக சுமார் 50 பேர்களைப் போலீசார் கைது செய்து காவலில் வைத்திருக்கின்றனர்

அண்ணாமலை நகரில் 2,000 மாணவர்கள் ஊர்வலம்

அண்ணாமலை நகர், பிப். 20—

இன்று இங்கு (அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில்) ஏறத்தாழ இரண்டாயிரம் மாணவர்கள் வேலைநிறுத்தம் செய்தார்கள். பெரும் அளவில் ஊர்வலம் சென்றனர். பின் திருவேட்களக்கரையில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றி பிரிந்தனர்.

சேலத்தில் ஆலைகள், கல்லூரிகள்—பள்ளிகள் விடுமுறை

சேலம் பிப், 20—

இரயில்கள் ஓடின; ஆனால், மணிக்கணக்கில் தாமதமாக ஓடின! பல பள்ளிகள் காலியாகக் கிடந்தன! குதிரை வண்டிகள்கூட நகரில் ஓடவில்லை!

ராஜேந்திரா மில், ஜவகர் மில் என்ற இரு ஆலைகளும் விடுமுறைப் பிரகடனம் செய்தன. மொத்தம் 3000 தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர்.

ஜவ்வரிசி ஆலைகள் சோம்பிக் கிடந்தன.

கல்லூரி விடுமுறை விட்டது. நகரமே அமைதியாகிக் கிடந்தது.

சர்வகட்சிக் கூட்டணியினரின் சிரமப்பட்டு மேற்கொண்ட முயற்சி முழு வெற்றியளித்தது.

'காங்கிரசார் கடைகளைத் திறக்கச் செய்ய செய்த முயற்சிகள் படுதோல்வியடைந்தன; என்ற வெற்றிச் செய்திசேலத்திலிருந்து தரப்பட்டிருக்கிறது.

மாலையில் 'வி' மார்க்கட் மைதானத்தில் பல்லாயிரம் மக்கள்கூடி 'தமிழர் உறுதி மொழி மேற்கொண்டுவிட்டு கலைந்து சென்றிருக்கிறனர்.

(ந. நி)

மகாமகம் நடைபெறும் குடந்தையில் பிப். 20 மகத்தான வெற்றி

குடந்தையில் 'மகாமகம்' புண்ணிய தீர்த்த முழுக்கு'த் திருவிழா' நடைபெறவிருப்பதை ஒட்டிப் பெரும் விழாக்கோலம் பூண்டிருக்கும் நிலையிலும் பொதுவேலை நிறுத்தம் வெகு சிறப்பாக நடைபெற்றிருக்கிறது.

அமைதியாக அசம்பாவித சம்பவங்கள் ஏதுமின்றி நகரின் பல பகுதிகளிலும் கடைகள், உணவு விடுதிகள், பள்ளிகள், கல்லூரி இவை எல்லாம் மூடப்பட்டு பொது வேலை நிறுத்தம் சிறப்பாக நடைபெற்றிருக்கின்றது.

காஞ்சியில் பூரண வேலை நிறுத்தம்

காஞ்சியில் இதுவரை வரலாறு கண்டிராத அளவு சிறப்பாக பூரண பொதுவேலை நிறுத்தம் நடைபெற்றிருக்கிறது.

எல்லாக் கடைகளும் அடைபட்டுக் கிடந்தன.

கூட்டணியினரின் பெருமுயற்சி சிறந்த வெற்றி பெற்றிருக்கிறது.

காலையில் சின்ன காஞ்சிபுரத்திலிருந்து சர்வகட்சி செயற்குழுவின் தலைவர்களடங்கிய ஓர் மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு கண்ணன் டாகீஸ் மைதானத்தைப் போய் அடைந்தது.

ஊர்வலத்திற்கு தோழர் கே எஸ். பார்த்தசாரதி தலைமை தாங்கியிருக்கிறார்.

பலத்த போலீஸ் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு அவசியமே இல்லாதவகையில் ஊர்த்தால் வெகு அமைதியாக நடைபெற்றிருக்கிறது.

எதேச்சாதிகாரத்தின் எதிரொலி

இரயில்வேகளுக்கு ஏற்பட்ட சேத விவரங்கள்

மாநில சீரமைப்பு முடிவுகளை அடுத்து ஏற்பட்ட கலவரங்களின் விளைவாக இரயில்வே சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதத்தின் மதிப்பு ரூ. 54,52,000 இருக்குமென மதிப்பிடப்பட்டிருப்பதாக மக்கள் சபையில், இரயில்வே—போக்குவரத்துத் துணை அமைச்சர் கூறியுள்ளார்.

பூரி இரயில்வே நிலையம் எரிக்கப்பட்டதால் மட்டும் ஏற்பட்ட மொத்த நஷ்டம் ரூ. 1,50,000 ஆகுமாம்.

பார்மோசா தீவுக்கு எதிரில் படைகள் குவிகின்றன?

லண்டன், பிப். 21—

பார்மோசாவுக்கும், குமாய், மாட்சு தீவுகளுக்கும் எதிரே 100 மைல் நீள சீனக் கடற்கரையில் 2½ இலட்சம் துருப்புகள் குவிக்கப்பட்டுள்ளதென்றும் இவற்றிற்குத் துணையாக வடக்கே 1,200 போர் விமானங்கள் உள்ளன என்றும் கூறப்பட்டுள்ளது.

இவை முன்னணித் துருப்புகள் என்றும், இப்படைகளுக்குப் பின்னால் இன்னும் 4½ இலட்சம் துருப்புகள் உள்ளன என்றும் அவர் சொன்னார்.

ஏமாந்த காமராசர் ஏவுகிருர் போலீசை!

கண்ணீர்புகை குண்டு வீச்சு

ஜீவா-வெங்கட்ராமன் மீது தடியடி

நூற்றுக்கணக்கானேரும் தாக்கப்பட்டனர்

சென்னை, பிப். 20—

'வேலை நிறுத்தம் வேண்டாம்; கடையடைப்பு கூடாது; கடைகளைத் திறந்து வையுங்கள்; ஆயுதந் தரித்த போலீசார் பாதுகாப்பு தருவார்', என்று அறிக்கை விட்ட காமராசர்—தனது அறிக்கையை தமிழக மக்கள் காலடியில் போட்டு மிதித்துவிட்டு சர்வ கட்சிக் கூட்டணியின் வேண்டுகோளுக்கு ஒப்ப ஹர்த்தாலை வெற்றிகரமாக்கியதினுல் ஏமாற்றமுற்ற முதன் மந்திரி காமராசர்—போலீஸ் புலிகளை ஏவியிருக்கிருர், ஆங்காங்கே மக்கள் மீது பாய்ந்து தாக்குமாறு!

தமிழகத்தின் பல்வேறு நகரங்களிலும் தடியடிப் பிரயோகம் வெகு தாராளமாகக் கையாளப்பட்டிருக்கிறது. நூற்றுக்கணக்கான தோழர்கள் தாக்கப்பட்டிருக்கின்றனர்.

ஊர்வலத்தில் கலந்து கொள்வதற்காக ஐலண்டு மைதானத்தில் திரண்டிருந்த மக்கள் மீது போலீசார், கண்ணீர்ப் புகைக்குக் குண்டுகளை வீசியிருக்கின்றனர்; பலர் அதனுல் அவதியுற்றிருக்கின்றனர்.

கூட்டத்தில் தோழர்களை ஒழுங்குடனும், அமைதியுடனும் நடந்து கொள்ளுமாறு கண்காணித்துக் கொண்டிருந்த கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்களான ப. ஜீவானந்தம் எம்.எல்.ஏ., எம். ஆர். வெங்கட்ராமன் இருவர் மீதும் கூட போலீசார் தடியடிப் பிரயோகம் செய்திருக்கின்றனர்.

அவரையும், வேறு பலரையும் பகல் 3-மணியளவில் கைது செய்து, காவலில் வைத்திருந்தனர்; பின்னர், கூட்டணித் தலைவர் பி. டி. இராசன் அவர்கள் முயற்சித்து, அவர்களை விடுதலை பெறச் செய்தார்.

நகரின் பல பகுதிகளிலும், ஹர்த்தால் அமைதியாக நடைபெறுவதைக் கண் காணித்துக் கொண்டிருந்த தோழர்கள்மீது ஏதாவது ஒரு சாக்குக்கூறி போலீசார் தடியடிப் பிரயோகம் நடத்தித் தாக்கியிருக்கின்றனர்.

திருச்சியில் பூரண ஹர்த்தால்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தந்திருந்தது.

நகரில் உள்ள சினிமாக் கொட்டகைகளில் 'இன்று காட்சிகள் கிடையாது' என்று விளம்பரமே செய்திருந்தனர்.

டவுன் பஸ்காரர்கள், காலை 9-மணி முதல் 11 மணி வரை பஸ்களை நிறுத்திவைத்துத் தங்கள் ஆதரவைக் காட்டிக்கொண்டனர்.

வெளியூர் செல்லும் பஸ்களில் மக்கள் எவரும் பயணம் செய்யவில்லை. போலீசாரின் நிர்ப்பந்தத்தின் காரணமாக பல பஸ்கள் வெளியூர் புறப்பட்டன. பஸ் நிலையத்தில் உள்ள கடைகள் யாவும் மூடப்பட்டிருந்தன.

திருச்சி இதுவரை கண்டிராத மாபெரும் கடைஅடைப்பு.

திருச்சி நகரிலும், மாவட்டப் பகுதிகளில் சில இடங்களில் ஒரு சில தோழர்களை போலீசார் முன் எச்சரிக்கையாகக் கைது செய்துள்ளார்கள்.

இன்று மாலை 4-30 மணிக்கு சர்வ கட்சி கூட்டணியின் மாபெரும் ஊர்வலம், மெயின் காட் கேட்டிலிருந்து தோழர் ஈ. வெ. கி. சம்பத் தலைமையில் புறப்பட்டு, மேல் அரண்சாலை வழியாக பாலக்கரை சென்று அங்கிருந்து கடை வீதி வழியாக வந்து டவுன் ஸ்டேஷன் அருகில் வன்னி மரத்தடியில் வந்து சேர்ந்தது.

கூட்டத்தில் தோழர் பி. ஆர். ராமசாமி, எம். சி., அவர்கள் பிரதிக்ஞை செய்தியை வரி வரியாக படிக்கவும், அவரைத் தொடர்ந்து மக்கள் யாவரும் ஏககாலத்தில் கூறவும் பிரதிக்ஞை எடுத்துக் கொண்ட பின், மக்கள் பெருமிதத்துடன் கலைந்து சென்றனர்.

ஊர்வலம் 1 மைல் நீளம் அமைதியாகவும், ஒழுங்காகவும், ஆர்வத்துடனும், கோஷமிட்டுக்கொண்டு சென்றது.

வழி நெடுகப் பல்லாயிரக் கணக்கான தாய்மார்கள் கண்டு ஆச்சரியமும், விஷய விளக்கமும் கொண்டனர்.

கூட்டணியின் பிரமுகர்கள் பலர் தோழர் ஈ. வி. கே. சம்பத் அவர்களுடன் கலந்து உரையாடி, தங்களின் முயற்சியையும், மக்கள் காட்டிய ஒத்துழைப்பையும் எடுத்துக் கூறினர்.

குறிப்பு :— திருச்சி காந்தி மார்க்கெட் மிகப் பெரியது; இன்று எல்லாக் கடைகளையும் மூடி ஹர்த்தாலை சிறப்பித்தது குறிப்பிடத்தக்கது.

பல நூறு தோழர்கள் கைது

கோவிந்தசாமி எம். எல். ஏ., இளங்கோ, முனுசாமி, அலமேலு-அப்பாதுரை சிறையில்!

அம்பில் - தர்மலிங்கம், எம். எஸ். மணி, இராசமாணிக்கமும் பிடிக்கப்பட்டனர்

சென்னை, பிப். 20—

சர்வ கட்சிக் கூட்டணியில் ஈடுபட்டுள்ள கட்சிகளில் தி. மு. கழகம், கம்யூனிஸ்டு, தமிழரசுக் கழகம் போன்றவற்றைச் சேர்ந்த பல தோழர்களைத் தமிழகமெங்கணும் போலீசார் கைது செய்து காவலில் வைத்திருக்கின்றனர்.

நூற்றுக்கணக்கான தோழர்கள் கைதாகியிருப்பது பற்றிய தகவல்கள் நமக்குக் கிடைத்தவண்ணமுள்ளன.

கடலூரில் தோழர் ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ., வேறு பல தோழர்களுடன் கைது செய்யப்பட்டிருக்கிருர்.

திருச்சியில் தோழர்கள் அம்பில்-தர்மலிங்கம், சென்னையில் தோழர்கள் ப. ஜீவானந்த , வெங்கட்ராமன் ஆகிய இரு கம்யூனிஸ்டுத் தலைவர்களும கைது செய்யப்பட்டனர்.

மற்றும் சென்னையில் நகரசபை உறுப்பினரான தோழர் வி. முனுசாமி, தோழியர் அலமேலு-அப்பாதுரை ஆகியோரும கைதாகிக் காவலில் உள்ளனர்.

கோவையில் எஸ். ஏ. இராசமாணிக்கம், கடலூரில் இரா. சாம்பசிவம், சென்னையில் சரோஜினி அம்மையார், திருச்சியில் எம். எஸ். மணி, தஞ்சையில் என். எஸ். இளங்கோ என்று பல நகரங்களிலும், முக்கியமான பலர் உள்ளிட்ட எண்ணற்றோர் கைதாகியிருக்கின்றனர்.

சென்னை நகரில் நடைபெற்ற அமைதியான ஹர்த்தாலுக்கு எதிராக சென்னை போலீசார் எடுத்துக்கொண்ட அடக்குமுறை நடவடிக்கைகளின் முதற்கட்டமாக சென்னை எஸ். வி. அம்பாள் கம்பெனியைச் சேர்ந்த தோழர்கள் குப்புசாமி, சுப்பிரமணி, உள்ளிட்ட நான்கு பேர் கைது செய்யப்பட்டனர். இவர்கள், 'அமைதியாகப் பொதுவேலை நிறுத்தம் செய்யுங்கள்' என்ற சுவரொட்டிகளை ஒட்டும்போது போலீசாரால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

இதுவரை ஆயிரம் பேர்களுக்கு மேலாக—பெரும்பாலானேர் தி. மு. கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டிருப்பது பற்றிய விபரங்கள் கிடைத்திருக்கின்றன.

கடலூர் :

ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ. உள்ளிட்ட 150 பேர் கைது.

கோவை :

இராஜமாணிக்கம் உள்ளிட்ட 113 பேர் கைது.

சென்னை :

சுமார் 100 பேர்வரை கைதாகியுள்ளனர்.

கோட்டாம்பட்டி :

பெரும்பாலான கழகத் தோழர்கள் உள்ளிட்ட 85 பேர்கள் கைது

தேனி :

தேனியில் விதிக்கப்பட்ட 144 தடை உத்தரவை எதிர்த்து அமைதியாக ஊர்வலம் சென்ற தோழர்கள் 65 பேர்வரை கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

பெரியகுளம் :

சர்வகட்சிக் கூட்டணித் தலைவர், தி. மு. கழகத் தோழர்கள் பெரும்பாலானேர் உள்ளிட்ட 50 பேருக்கு மேல் பகல் 12 மணி வரை கைது.

இடைப்பாடி :

24 கழகத் தோழர்கள் கைது.

சென்னிமலை :

பிப். 20 பகல் 12 மணிவரை 23 தோழர்கள் கைதாகியுள்ளனர்

தியாகதுருகம் :

இங்கு பிப். 20-ந் தேதி காலை 11 மணிவரை 15 தி. மு கழகத் தோழர்கள் உள்ளிட்ட 20 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

வாணியம்பாடி :

தி. மு கழகச் செயலாளர் கைது.

குடியேற்றம் :

15 தி. மு. கழகத் தோழர்கள் உள்ளிட்ட 20 பேர்கள் கைதாகியுள்ளனர்.

திருச்செங்கோடு :

பல தி. மு. கழகத் தோழர்கள் உள்ளிட்ட 18 பேர் கைது.

நாமக்கல் :

ஐந்து தி மு கழகத் தோழர்கள் உள்ளிட்ட 12 பேர் கைது.

இராசீபுரம் :

12 பேர் கைது.

கொத்தகிரி :

தி. மு கழகத் தோழர்கள் 12 பேர் கைதாகியுள்ளனர்.

பூந்தமல்லி :

10 பேர் — பெரும்பான்மையோர் கழகத் தோழர்கள் கைது.

தலைஞாயிறு :

10 கழகத் தோழர்கள் கைது.

கிருஷ்ணகிரி :

எட்டு தோழர்கள் கைது.

குத்தாலம் :

கழகத் தோழர்கள் எட்டு பேர் கைது.

வேலாயுதம்பாளையம் :

3 தி. மு. கழகத் தோழர்கள் உள்ளிட்ட 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

லால்குடி :

4 தி. மு. கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டனர்.

தோட்டம்பாளையம் :

மூன்று தி. மு. கழகத் தோழர்கள் கைதாகியுள்ளனர்.

செல்லப்பம்பட்டி :

மூன்று கழகத் தோழர்கள் கைது

தாமரைக்குளம் :

இங்கு தி. மு கழகச் செயலாளர், சுரங்கத் தொழிலாளர் சங்கத் தோழர் ஒருவர் ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

அரக்கோணம் :

தோழர் ஏ எல். சி. கிருஷ்ணசாமி உள்ளிட்ட ஏழு பேர் கைது.

செம்பனூர்கோவில் :

தி மு. கழகச் செயலாளர் கைது.

மறைந்த மாவீரர்

பாண்டியனுர்

மூன்ருவது ஆண்டு நினைவு விழா

22—2—56-ல், மதுரை மாவட்டம் பட்டிவீரன்பட்டியில், பாண்டியனுர் திடலில், மேற்படி நினைவு விழா நடைபெறும். தோழர்கள் கே. ஏ. மதியழகன், பொன்னம்பலனுர், ஏ. வி. பி. ஆசைத்தம்பி ஆகியோர் பேசுவர்.

★★★-★★★★-★★★★★★★★★★

அண்ணமலை நகரில் அண்ணு

22—2—56 மாலை 5 மணிக்கு திராவிட முன்னேற்றக் கழக மாணவர் கிளை சார்பில் திருவேட்களக் குளக்கரையில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில், அண்ணு, என். வி. நடராசன், தில்லை-வில்லாளன் ஆகியோர் பேசுவர்.

★★★★★★★★★★-★★★★-★★★

அதிராம்பட்டினத்தில் தடையுத்தரவு மீறப்பட்டது!

என். எஸ். இளங்கோ, பல தோழர்களும் கைது

அதிராம்பட்டினம், பிப். 20—

'போலீசாரின் தடையுத்தரவை மீறி அதிராம்பட்டினத்தில் ஆலடிக்குளக்கரையில் இருந்து ஒரு கோஷ்டியினர் ஊர்வலம் புறப்பட்டனர்.

'தேவிகுளம்—பீர்மேடு தமிழருக்கே,' 'தட்சிணப் பிரதேசத்தை எதிர்ப்போம்' என்று கோஷமிட்டுக்கொண்டு வந்தனர். தோழர் என். எஸ். இளங்கோ தலைமை தாங்கினுர்.

100 கெஜ தூரம் ஊர்வலம் வந்தவுடன் போலீசார் பின்கண்ட தொண்டர்களைக் கைது செய்து 'ரிமாண்டு' செய்தனர் :—

என். எஸ். இளங்கோ (தி.மு.க.) டி. ரெத்தினம் (கம்.), வி. முருகேசன் (பி.சோ.), ஆர். முனுசாமி, கே. எம். இஸ்மாயில், ஏ. அருணாசலம், வி. வி. சபாபதி, கே. ஆர். காடிமுத்து, எம். சாம்பசிவம், வி. சங்கர்.

எஸ். வையாபுரி (பிள்ளை) காலமானுர்

சென்னை, பிப். 18—

பேராசிரியர் எஸ். வையாபுரி (பிள்ளை) அவர்கள் தனது 68-வது வயதில் கேற்றிரவு 11-50 மணிக்கு, காந்தி நகரிலுள்ள தம் இல்லத்தில் இயற்கை யெய்தினுர்.

அவர், தமிழ் 'லெக்சிகன்' பதிப்பாசிரியராக 10 ஆண்டுகளும், சென்னை பல்கலைக் கழகத்தின் தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவராகப் பத்து ஆண்டுகளும் தொண்டாற்றியுள்ளார்.

ஆயுள் 'இன்ஷ்யூரன்ஸ்' தொழிலை அரசிடமாக்கும் மேற்கொள்வது பற்றிய இரண்டு மசோதாக்கள் மக்கள் சபையின் சர்க்காரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

'இன்ஷ்யூரன்ஸ்' தொழில் நாட்டு உரிமையாக்கப்பட்ட பின்னர், இந்திய ஆயுள் 'இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷன்' மூலமாக அத்தொழிலை நடத்த ஒரு மசோதா வழி செய்கிறது.

'இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷ'னின் மூலதனம் ரூ. 5 கோடி

சென்னையில் மாபெரும் ஊர்வலம்

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

'வாருங்கள்—வந்து பாருங்கள்—வாங்குங்கள்' என்று, காணுவோர் கண்களை ஈர்த்து, கருத்தைக் கவர்ந்து, ஆசையை மூட்டிடச் செய்யும் படாடோப விளம்பரங்களுடன் தமிழகத்தின் பொருளைச் சுரண்டிச் செல்லும் வடநாட்டவர்கடைகள்—துணிக் கடைகள், உணவு விடுதிகள் முதலியன எவையும் திறந்திருக்கவில்லை! 'எங்கிருந்தோவந்த அவர்கள்,இங்குள்ள தமிழர்தம் நியாய உணர்வை மதித்துக் கடைகளை அடைப்பார்களா? அல்லது, 'இவர்கள் என்ன சோல்லுவது—நாமென்ன அடைப்பது? சர்க்கார் இருக்கிறது, பாதுகாப்புத் தர!' என்று எண்ணி கடைகளைத் திறப்பார்களா?' என்ற ஐயத்தோடு, பெரும் கடைகளை வலம் வந்து கோண்டிருந்த மக்கள் கூட்டம், கடைகள் மூடப்பட்டிருப்பது கண்டு மனநிறைவு கோண்டது.

சென்னை நகரில் சர்க்கார் நடத்தும் பஸ்கள்தான் ஓடிக்கொண்டிருந்தனவே தவிர, வேறெந்த வெளியூரிலிருந்தும் பஸ்கள் ஒன்றுகூட வரவும் இல்லை; இங்கிருந்தும் வெளியூருக்குச் செல்லவுமில்லை என்பதும் குறிப்பிடத்தகுந்ததாகும்.

நேரம் ஆக ஆக, வீதிகளில் நிமிடத்திற்கு நிமிடம் உருமாறிப் பெருத்துவந்த மக்கள் கூட்டம் கட்டுப்பாடாக, விரும்பத்தகாத சம்பவங்கள் எதிலும் ஈடுபடாது தலைவர்களின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு அமைதியாக நடந்து கொண்டனர்.

ஹர்த்தால் அமைதியாக வெற்றிகரமாக நடைபெற வேண்டி கூட்டணித் தலைவர்கள் அண்ணு ம. பொ. சி., நெடுஞ்செழியன், என். வி. நடராசன், கே. விநாயகம், சின்ன அண்ணுமலை, ஜி. உமாபதி, ஷெரீப் ஆகியோர் நகரின் பல பகுதிகளுக்கும் காரில் சென்று ஆங்காங்கு கூடியிருந்த மக்களையும், தோழர்களையும் அமைதியாக நடந்துகொள்ளுமாறு வேண்டிக் கொண்டனர்.

அதே போன்று, சென்னை தொழிற் சங்கத் தலைவர் எஸ். சி. சி. அந்தோணிப் பிள்ளை அவர்கள், தொழிலாளர்கள் வாழும் பல பகுதிகளுக்கும் சென்று அமைதி காக்குமாறு வேண்டுகோள் விடுத்து வந்தார்.

கூட்டணித் தலைவர் பி. டி. இராசன் அவர்கள், அவ்வப்போது நிலைமைகளைத் தெரிந்துகொண்டு, ஹர்த்தால் வெற்றிகரமாக நடைபெற முயற்சிகளை மேற்கொண்டார்.

அண்ணு அவர்களும் மற்ற தோழர்களும் சென்னை தொழிற்சங்க அலுவலகம் சென்றபோது அங்கு தோழர்கள் அந்தோணி பிள்ளை, பக்கிரிசாமிபிள்ளை ஆகியோரும் எண்ணற்ற தொழிலாளர் பெருமக்களும் கூடிநின்று அவர்களை வரவேற்று, நிலைகளை விளக்கினர்.

நகரிலேயே மிகப் பெரிய தொழிற்சாலையான பக்கிங்காம் கர்நாடிக் ஆலைத் தொழிலாளர்கள் கட்டுப்பாடாக வேலைக்குச் செல்லாதிருந்து தங்கள் நாட்டுப் பற்றையும், மொழிப் பற்றையும் காட்டிக் கொண்டனர்.

'விம்கோ' தீப்பெட்டித் தொழிற்சாலை,'ஸ்பென்சர்' கம்பெனி, மற்றும் பல தொழிற்சாலைகள் எல்லாம் வேலை செய்யவில்லை.

தபால்—தந்தி அலுவலகங்கள் வேலைசெய்த போதிலும் தபால், மணிஆர்டர் பட்டுவாடா இருக்கவில்லை.

ஐலண்டு மைதானத்தில் ஊர்வலத்தில் கலந்துகொள்வதற்காக மக்கள் பல்லாயிரக் கணக்கில் திரண்டதை ஒட்டி, பகல் ஒருமணியிலிருந்தே, பஸ் போக்குவரத்து, மவுண்ட்ரோடு வழியாகச் செல்லாமல், எழும்பூர் வழியாகத் திருப்பி அனுப்பப்பட்டது.

நகரின் பிரதான வீதிகளான ஜார்ஜ் டவுன், சைனு பஜார், பூக்கடை, பாய்க் கடை, தங்கசாலை, மவுண்ட்ரோடு முதலியவையும், மயிலாப்பூர், திருவல்லிக்கேணி, பைகிராப்ட்ஸ் ரோடு, வண்ணாரப்பேட்டை, தியாகராய நகர், கோமளீஸ்வரன்பேட்டை, சிந்தாதிரிப் பேட்டை, புதுப்பேட்டை, எழும்பூர்,பெரியமெட்டு, பார்க் டவுன், தேனும்பேட்டை, ஆயிரம் விளக்கு, இராயப்பேட்டை நுங்கம்பாக்கம், கோடம்பாக்கம், சைதாப்பேட்டை, ஆலந்தூர், பெரம்பூர், சூளைமேடு முதலிய பேட்டைகளிலும் மார்க்கெட்டுகள், சிறிய பெரிய கடைகள் எல்லாம் முழுவதுமாக மூடிக் கிடந்தன.

எந்தப் பகுதியிலும் கடைகள் மூடப்படாமலிருந்து, அவற்றை மூடுவதற்காக தோழர்கள் முயற்சித்து, அதனுல் ஏதேனும் சம்பவங்கள் நிகழ்ந்தன. என்பதற்கே பொதுவாக இடமிருக்கவில்லை.

கூட்டணியினர் அறிவித்திருந்தபடி ஐலண்டு மைதானத்திலிருந்து ஊர்வலம் புறப்படுவதற்காக பகல் 1-மணியிலிருந்தே மக்கள் ஆயிரம் ஆயிரமாகத் திரண்டுவிட்டனர்.

போலீசார் இரும்புத் தொப்பியணிந்து, துப்பாக்கியும் தடியும் ஏந்தி, சைகிள், மோட்டார் சைகிள், லாரிகள், கார்கள் ஆகியவற்றில் ஏறிக்கொண்டு நகர் முழுவதிலும் 'உலா' வந்துகொண்டிருந்தனர்.

பகல் 3 மணி சுமாருக்கு இலட்சக்கணக்கான மக்கள் ஐலண்டு மைதானத்தில் திரண்டுவிட்டிருந்தனர்.

சர்வ கட்சித் தலைவர்களும் மைதானத்தை அடைந்த போது, அதுவரை அடக்கி வைத்துக்கொண்டிருந்த தங்கள் பொங்கும் உணர்ச்சியினை ஒன்று திரட்டி, விண்ணதிர முழங்கினர்—'தமிழர் நாடு தமிழருக்கே,' 'தேவிகுளம்—பீர்மேடு தமிழருக்கே,' 'சென்னையை 'தமிழ் நாடு' என்று அழைக்க வேண்டும்,' 'டில்லியின் அநீதி ஒழிக', 'எதேச்சாதிகாரப் போக்கு ஒழிக' என்று குரல் எழுப்பினர்.

சென்னைநகர போலீஸ் கமிஷனர், நகரின் பல பகுதிகளையும் சுற்றிப் பார்த்தபின், பத்திரிகையாளரிடம், 'எல்லாம் அமைதியாகவே நடைபெறுகிறது' என்று தெரிவித்திருக்கிறார்.

சரியாக 3-30 மணிக்குக் கூட்டணித் தலைவர்கள் முன் செல்ல, எழுச்சியுற்ற மக்கள் சகல கட்சிகளையும் சேர்ந்த தோழர்கள், மாணவப் பெருமக்கள் உரிமைக்குரல் எழுப்பிய வண்ணம் பின்தொடர அந்த பிரம்மாண்டமான ஊர்வலம் துவங்கிற்று.

நகரத்தில் அர்த்தால் அமைதியாக நடைபெறுவதால் ஏற்பட்ட மகிழ்ச்சி தலைவர்களின் மலர்ந்த முகத்தில் பிரதிபலித்தது.

ஊர்வலம் ஐலண்டு மைதானத்திலிருந்து, மவுண்ட்ரோடு வழியாக வாலாஜா ரோடு வழியாக வந்தபோது, ஊர்வலத்தின் அளவு மேலும் விரிந்துவிட்டது; நகரின் நடுநாயகமான—இதயமான அந்தப் பகுதியில் ஒரே மக்கள் வெள்ளம்! இத்தனை பெரிய மக்கள் கூட்டத்தின் பெரும் ஒலி முழக்கங்கள், அவர்களது ஒரே தெளிவான நோக்கத்தை முரசறைந்துகொண்டிருந்தன.

ஊர்வலம், வாலாஜா ரோடிலிருந்து பெல்ஸ் ரோடு, பைக்ராப்ட்ஸ் ரோடு வழியாக, திருவல்லிக்கேணி கடற்கரையை அடைந்தபோது மணி சுமார் 5-30 ஆகியிருந்தது.

ஊர்வலத்திலிருந்த மக்கள் வெள்ளம் கடற்கரைக்குள் நுழைந்த காட்சி, புதிதாகப் பெருக்கெடுத்த ஆற்று நீர் கரை புரண்டு ஓடி கடலில் கலக்க முந்துவதுபோலிருந்தது!

மாலைக் கதிரவனின் மஞ்சள் வெயிலில் மக்களின் உற்சாகமான தோற்றம் மேலும் பொலிவு பெற்று விளங்கியது.

அங்கே ஆர்வத்தோடு கூடிய லட்சோப லட்சம் மக்களுக்கும் சென்னையைப்போலவே இதர நகரங்களிலும்—மதுரை, கோவை, காஞ்சி, திருச்சி முதலிய நகரங்களிலும் ஹர்த்தால் அமைதியாக முழு வெற்றியுடன் நடைபெற்ற செய்தியை தோழர் என். வி. நடராசன் அறிவித்தார். ஒவ்வொருஊரைப் பற்றிய செய்தியையும் அவர் அறிவித்தபோது மக்கள் கூட்டம் அதனை பேராரவாரம் செய்து கையொலி எழுப்பி வரவேற்றனர்.

அடுத்து கூட்டணித் தலைவர் பி. டி. இராசன் அவர்கள், வெற்றிகரமாக — அமைதியாக ஹர்த்தாலை நடத்திக்காட்டிய பொது மக்களுக்கும், சர்வ கட்சித் தோழர்களுக்கும், நன்றியும் பாராட்டும் தெரிவித்துக் கொண்டார்.

தமிழர் மேற்கொள்ள வேண்டிய உறுதிமொழி குறித்து அவர் விளக்கிவிட்டு, உறுதிமொதிகள் மூன்றையும் ஒவ்வொன்ருக வாசித்தார்.

மக்கள் அவற்றை ஒரு மனதுடன் ஏற்றுக்கொண்டு குரல் கொடுத்தனர்.

அடுத்து, "எல்லோரும் அமைதியாகவே—எஞ்சியுள்ள நேரத்திலும் நடந்துகொள்ள வேண்டும்' என்று கோரி, 'அதற்கும் உறுதி மொழி அளிக்கவேண்டும்' என்ருர், இராசன். மக்களும்மனமுவந்து உறுதி மொழி அளித்தனர்.

இறுதியாக அண்ணு அவர்கள், மக்கள் அமைதியாக ஹர்த்தால் நடத்தியதற்குக்கூட்டணி சார்பில் நன்றி தெரிவித்துக்கொண்டு, 'திரும்பச் செல்லும்போதும் அமைதியாகவே செல்வோம்' என்று மக்கள் தந்த உறுதிமொழியை நினைவுபடுத்தி, எல்லோரும் உடன் கலைந்து செல்ல வேண்டுமெனக் கோரினர்.

'எழுந்திருங்கள்,' என்று அண்ணு அவர்கள் கூறியதும், அனைவரும் எழுந்தனர்; 'கலைந்து செல்லுங்கள் — அமைதியாக' என்று கூறியதும், அனைவரும் வேகவேகமாகக் கலைந்து சென்றனர்.

இந்தக் காட்சி, பாம்பாட்டியின் மகுடிக்குக் கட்டுப்பட்டு ஆடும் பாம்பையும், தளபதியின் ஆணைக்குக் கடமையால் பணியும் பட்டாளத்தையும் நினைவுபடுத்தின.

அங்கொன்றும் இங்கொன்றுமாக சில சிறு சம்பவங்களைத் தவிர, பொதுவில் சிறிதும் கலவரத்திற்கு இடமின்றி, தலைநகரம் அமைதியாக ஹர்த்தால் கடைப்பிடித்து கூட்டணிக்கு வெற்றியளித்தது.

பல இலட்சம் மக்களடங்கிய மாபெரும் பொதுக்கூட்டம்

சர்வகட்சித் தலைவர்கள் சங்கநாதம்

'பிப்ரவரி 20' குறித்து விளக்குவதற்காக சர்வ கட்சிக் கூட்டணியினர் பிப்ரவரி 19-ந்தேதியன்று சென்னைக் கடற்கரையில் ஏற்பாடு செய்திருந்த மாபெரும் பொதுக் கூட்டத்தில் கடல் அலைகளைப் போன்ற எண்ணற்ற மக்கள் திரண்டிருந்தனர். அந்தக் கடற்கரை இதுவரை அத்தனை மக்களை சமீப காலத்தில் ஒன்ருகச் சந்தித்ததில்லை. கூடியிருந்த மூன்று இலட்சத்திற்கும் அதிகமான மக்களின் உள்ளத்தில் ஊற்றெடுத்துப் பெருகிப் பொங்கிப் பிரவாகமெடுத்த உணர்ச்சி வெள்ளத்தை 'அமைதி — கண்ணியம் — கட்டுப்பாடு' என்ற சர்வ கட்சித் தலைவர்களின் சங்கநாதம் அணைபோட்டுத் தடுத்தது.

கூட்டணிச் செயலாளர் தோழர் என். வி. நடராசன் முன்மொழிய, தோழர் சின்ன அண்ணுமலை வழிமொழிய, கூட்டணித் தலைவர் திரு. பி. டி. இராசன் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை ஏற்று, 'பிப்ரவரி 20-ந் தேதி பொது வேலைநிறுத்தம் ஏன் என்பதையும், அது நடைபெற வேண்டிய அமைதியான முறை குறித்தும் விளக்கம் தந்து சிறப்புமிக்கதோர் முன்னுரை நிகழ்த்தினர்.

அடுத்து, தோழர்கள் சின்னசாமி (சோஷலிஸ்டு), ப.ஜீவானந்தம் (கம்யூனிஸ்டு), கே. விநாயகம் (வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழு), எம். ஜி. இராமச்சந்திரன் (நடிகர் சங்கம்), சுப்பிரமணியம் (பி. சோ.), இரா. நெடுஞ்செழியன் (தி. மு. க.), ஏ. கஜபதி (தமிழர் பேரவை), எஸ். சி. சி. அந்தோணிப் பிள்ளை (சோஷலிஸ்டு), நாரண துரைக்கண்ணன் (எழுத்தாளர் சங்கம்), ம. பொ. சிவஞானம் (தமிழரசுக் கழகம்), சுந்திரராசன் (தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம்) ஆகியோர் பேசியதும், இறுதியாக அண்ணு அவர்கள் அரியதோர் சிறப்புரை நல்கினர்கள்.

வாள் கூராக்கப்படுவதுபோல, வைரம் பட்டை தீட்டப்படுவதுபோல, தங்கம் புடம் போடப்படுவதுபோல, உணர்ச்சி நிறைவால் ததும்பிக்கொண்டிருந்த மக்களது உள்ளமெல்லாம், தலைவர்களது முழக்கத்தால் 'பிப்ரவரி 20 அமைதியாகவே நடக்க வேண்டும்' என்ற எண்ணத்தைப் பெற்று பண்படுத்தப் பட்டன.

மதுரையில் மகத்தான வெற்றி

(டிரங் போன் மூலம்)

மதுரை, பிப். 20—

மதுரை நகரின் அரசியல் வரலாறு இதுவரை கண்டறியாதவண்ணம் இன்று பொது வேலைநிறுத்தம் அமைதியாகவும், சிறப்பாகவும் நடைபெற்று முழு வெற்றியுற்றிருக்கிறது.

'கடைகளைத் திறவுங்கள்—போலீஸ் பாதுகாப்பு கிடைக்கும்' என்று முதல்நாளே சர்க்கார் அதிகாரிகள் தண்டோரா போட்டிருந்தும், நகரின் முக்கிய கடை வீதிகளில் எல்லாம் எந்த ஒரு கடையும் திறந்திருக்கவில்லை.

டவுன் ஹால் ரோடு, மேற்குக் கோபுர வாசல், தெற்கு வாசல், நான்கு வெளிவீதிகள், மாசி வீதிகள், ஆவணி மூல வீதிகள், சித்திரை வீதிகள் எல்லாம் கடைகளும், வர்த்தக நிலையங்களும், கமிஷன் மண்டிகளும் மூடப்பட்ட நிலையில் வெகு அமைதியாகத் தூங்கிக்கொண்டிருந்தன.

அமெரிக்கன் கல்லூரி, தியாகராசர் கல்லூரி ஆகியவற்றைச் சேர்ந்த எல்லா மாணவர்களும், மதுரைக் கல்லூரியைச் சேர்ந்த பெரும்பகுதி மாணவர்களும், உயர்நிலைப் பள்ளிகளைச்சேர்ந்த மிகப் பெரும்பாலான மாணவர்களும் வகுப்புகளுக்குச் செல்லாது பொது வேலைநிறுத்தத்தில் கலந்துகொண்டுள்ளனர்.

பொதுமக்களும், வர்த்தகர்களும் தொழிலாளர்களும் ஆர்வத்துடன் இதில் பங்குபெற்றுபாராட்டுதலைப் பெற்றிருக்கின்றனர்.

நகரில் உள்ள ஆலைகளில் ஒன்றைத் தவிர இதரவை வேலை செய்யவில்லை.

பஸ் போக்குவரத்து, கூட்டணியினர் தீர்மானப்படி இடையூறு எதுமின்றி நகரில் ஓடுவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

கூட்டணித் தோழர்கள் அனைவரும் தீவிர முயற்சி மேற்கொண்டு தமிழர்கள் உரிமைப் போர்முரசு கொட்டும் இந்தப் பொது வேலைநிறுத்தை வெற்றிகரமாக்கியிருக்கின்றனர்.

இந்தச் செய்தி, சென்னைக்குத் தரப்பட்டபோது, சர்வகட்சித் தலைவர்கள்—குறிப்பாகக் கூட்டணித் தலைவர் பி. டி. இராசன் அவர்களும் மிக்க மகிழ்ச்சியுற்றனர்.

'சிலர் கல்லெறிதல் போன்ற செயல்களில் ஈடுபட்டனர்' என்று வெளிவந்த செய்திகளுக்கு ஆதாரமில்லை.

போலீசார் பல மாணவர்களைக் காரணமேதுமின்றிக் கைது செய்து காவலில் வைத்தனர் எனத் தெரியவருகிறது.

சட்ட விரோதம்தானும்!

புதடில்லி, பிப். 17—

சென்ற மாதத்தில் இரு நாட்கள் பாங்கி ஊழியர்கள் மேற்கொண்ட வேலைநிறுத்தம் 'சட்ட விரோதம்தான்' என்று மக்கள் சபையில், தொழில் மந்திரி கந்துபாய் தேசாய் குறிப்பிட்டுள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ